# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

**OS. No.43/2016**

சாட்சி -PW1

பெயர் -மல்லிகா

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.07.2026.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் USA - புளோரிடா- வில் வசிக்கிறேன். நான் நோட்டரி வழக்கறிஞரிடம் கையெழுத்து வாங்கவேண்டும் என்றால் அங்கு நேரடியாக போய் கையெழுத்து வாங்க வேண்டும்.அது போல் நான் சத்திய பிரமாணம் செய்து தான் கையெழுத்து வாங்கவேண்டும் என்றால் சரி. என்னிடம் காண்பிக்கபடும் நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள Affidavit-உள்ள கையெழுத்து என்னுடையதுதான். USAவில் இருந்த போது வாதியின் வழக்கறிஞருக்கு மெயிலில் அனுப்பிய வாதியுடைய லெட்டர் அது.

என்னிடம் காண்பிக்கபடும் மேற்சொன்ன கடிதம் நான் அனுப்பிய கடிதம் என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. மேற்படி கடிதத்தை நான் வழக்கறிஞருக்கு அனுப்பியதான் என்றும் தற்போது வழக்கை மறைப்பதற்கு நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி என்னிடம் காண்பிக்கப்படும் கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கடிதத்தில் உள்ள எனது கையெழுத்து பி.வா.சா.ஆ.1 ஆகும்.

என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் நான் எனது சகோதரருக்கு எழுதி வைத்த பொது அதிகார பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் பொது அதிகாரம் பத்திரம் நான் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. அதில் நான் கையெழுத்து செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கபடும் பொது அதிகார பத்திரத்தில் சாட்சி கையொப்பம் எனது கணவரும் மற்றும் எனது மகன் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அது அவர்களின் கையெழுத்து கிடையாது.

என்னிடம் காண்பிக்கப்படும் உயில் என் அம்மா, 2 ஆம் பிரதிவாதி தயாளனுக்கு

தாவா 2 ஆவது அட்டவணை சொத்து குறித்து எழுதிக் கொடுத்த உயிலில் நான் எனது கணவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் மேற்படி உயிலில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. மேற்படி உயிலில் என் அம்மா முறையாக நோட்டரி பப்ளிக் முன்பு எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், அதில நானும், எனது கணவரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் சாட்சி கையெழுத்து செய்யவில்லை.

22.10.2025ல் எனது குறுக்கு விசாரணையில் நான் தாயார் கேட்டு கொண்டதன்படி ஒரு ஆவணத்தில் கையெழுத்து செய்தேன் என்றும், அந்த ஆவணம் எது என்று எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன். அந்த ஆவணம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உயில் என்றால் சரியல்ல. என்னிடம் என் அம்மா கையெழுத்து வாங்கியது சொத்துக்களை பராமரிக்கும் ஆவணம் என்று தான் ஒரு ஆவணத்தில் கையெழுத்து வாங்கினார்கள்.

எனவே மேற்படி உயிலில் நான் USA வில் நோட்டரி பப்ளிக் முன்பாக நானும், எனது கணவரும் என் அம்மா எழுதிய உயிலில் கையெழுத்து செய்து விட்டு தற்போது நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1995ல் பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தில் நான் பாகபிரிவினை ஒப்புக் கொண்டு நான் கையெழுத்து செய்தேன் என்றும் தற்போது ஏற்கனவே பாகபிரிவினை ஏற்பட்டதை மறைப்பதற்காக கையெழுத்து எனதில்லை என்று மறைக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி பாகபிரிவினை பத்திரம் 08.09.1995ல் எங்களை இன்னார் என்று நிருபித்தவர் என பத்திரத்தில் எனது கணவரும், எனது கணவரின் தம்பி விஜயகுமாரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானோ, எனது கணவர் பாகபிரிவினை பத்திரத்தில் கையெழுத்து இட வில்லை. பாகபிரிவினை பத்திரத்தில் 08.09.1995ல் நான் தமிழ்நாட்டில் தான் இருந்தேன் என்றும் தற்போது பாகபிரிவினை மறைப்பதற்கு USA-வில் இருந்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 08.09.1995ல் பாகபிரிவினை பத்திரத்தில் கையெழுத்து என்னுடையது என்றால் சரியல்ல. 08.09.1995 பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தின்படி பாகபிரிவினை பத்திர C செட்டியூல் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

எனக்கு ஒதுக்கப்பட்ட பாகபிரிவினை சொத்தை C செட்டியூல் சொத்தை குறித்து எனது சகோதரர் 2 ஆம் பிரதிவாதிக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றும், அதை USA-வில் நோட்டரைஸ் பண்ணி கொடுத்துள்ளேன் என்றால் அது போல் எந்த ஆவணமும் எழுதி தரவில்லை. நான் முறையாக பொது அதிகார பத்திரம் USA- வில் நோட்ரி பப்ளிக் முன்பாக சத்திய பிரமாணம் செய்து எழுதி அனுப்பிவிட்டு தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(2 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the July 27th 2026.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.07.27 05:16:29 +0600

Additional District Judge(FTC),
Vellore.